

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று (26.06.2023) சைதாப்பேட்டை, அன்னை வேளாங்கண்ணி மகளிர் கல்லூரியில், உலக வெண்புள்ளிகள் தினம் 2023 ஐ முன்னிட்டு, இந்திய வெண்புள்ளிகள் விழிப்புணர்வு இயக்கம் சார்பில், சேர்ந்து வரைவோம் மற்றும் விழிப்புணர்வு உறுதியேற்பு நிகழ்ச்சியை தொடங்கி வைத்து, வெண் புள்ளிகள் விழிப்புணர்வு உறுதிமொழியினை ஏற்றார். இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற நீதிபதி ஆர்.பரஞ்சோதி, மண்டலக்குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, வெண்புள்ளிகள் விழிப்புணர்வு இயக்கம் சார்பில் கே.உமாபதி, முனைவர்.டி.இ.திருவேங்கடம், அன்னை வேளாங்கண்ணி கல்வி குழுமத்தின் நிறுவனத் தலைவர் முனைவர்.எஸ்.தேவராஜ், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவேற்காடு நகராட்சியில் 13,01,12, 04,08,15 ஆகிய வார்டுகளில் ரூபாய் 11.18 கோடி மதிப்பீட்டில் 5.989 கிமீ நீளத்திற்கு மழை நீர் வடிகால்வாய் பணிகளை முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ துவக்கி வைத்து விரைந்து பணிகளை முடிக்க அதிகாரியிடம் தெரிவித்தார். உடன் நகர்மன்ற தலைவர் என்.இ.கே.மூர்த்தி, மாநில மாவட்ட நிர்வாகிகள் ஜெ.ரமேஷ் பிரபு கஜேந்திரன், ஏ.ஜெ.பவுல், நகராட்சி ஆணையர் ஜஹாங்கிர் பாஷா, பொறியாளர் அ.பு.குமார், சுகாதார அலுவலர் ஆல்பர்ட் அருள்ராஜ் , மேற்பார்வையாளர் ரங்கசாமி, கவுன்சிலர்கள் எஸ்.சங்கர், காஞ்சனா இளையராஜா, சாந்தி ராஜா, ஜானகி சுடலைமணி, கே.பி. எஸ்.சுதாகர், நிர்வாகிகள் பெஞ்சமின், குமாரசாமி, நடராஜ், சாது, கோலடி ஜெ.சரவணன், செல்லதுரை, பி.வி.கே.கண்ணன், குமார், ராங்கதுரை, உமாபதி, தெய்வசிகாமணி, பரிசமுத்து, பா.பன்னீர் செல்வம், கோபால், சத்தியகிரி, குருநாதன், என்.ராஜி, நாராயணன், நரேஷ், பேபிஸ்ரீ, உள்பட கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டார்கள்.

### கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி

# கரூர் வெங்கமேட்டில் மருத்துவ முகாம்!

## 100க்கும் மேற்பட்டோருக்கு நல உதவிகள்!

கரூர், ஜூன் 27-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இலவச பன்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம் கரூரில் நடைபெற்றது.

முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இலவச பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாம் கரூர் மாநகராட்சி வெங்கமேடு பகுதியில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் த. பிரபு சங்கர் பார்வையிட்டார்.சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம், (குளித்தலை) ஆர்.இளங்கோ (அரவக்குறிச்சி), க.சிவகாம சுந்தரி (கிருஷ்ணாராயபுரம்} கரூர் மாநகராட்சி மேயர். சு.கவிதா ஆகியோர் நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்தார்கள்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு, அரசு மேல்நிலைப் பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக நடைபெற்ற பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் பல்வேறு மருத்துவ பரிசோதனை மற்றும் இலவச மருத்துவ சிகிச்சைகளை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி துவக்கி வைத்து நேரில் பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ், மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன்,டி.ஜெ.கோவிந்தராஜன், இணை இயக்குநர்மரு.சேகர், துணை இயக்குநர், மரு.ஜவஹர்லால், மருத்துவமனை முதல்வர் மரு.திலகவதி, ஒன்றியச் செயலாளர் எஸ். மகாலிங்கம், ஒன்றிய குழு துணை தலைவர் சுஜாதா மகாலிங்கம், மாவட்ட கவுன்சிலர் விஜயகுமாரி சரவணன், நிர்வாகிகள் கே.திராவிட பக்தன், ஆர்.டி.இ.ஆதிசேசன்,ப.சிட்டிபாபு, மோ.ரமேஷ், கே.அரிகிருஷ்ணன், சி. ஜெயபாரதி, களாம்பாக்கம் எம்.பன்னீர்செல்வம், ஆர்.ராஜா, ஜி.ரமேஷ், எஸ்.சண்முகம், த.தினகரன், நீலாவதி சீனிவாசன், ஏ.பி.செந்தில்குமார், தி.நந்தகுமார், அப்துல்லஹீம், ராஜேஸ்வரி பிரபாகர் மருத்துவர்கள், செவிலியர்கள், பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி தமிழ்நாடு முழுவதும் 1010 இலவச பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெற்றன. அதையொட்டி கரூர் மாநகராட்சி வெங்கமேட்டில் இந்த முகாம். நடத்தப்பட்டது.

இச் சிறப்பு முகாமில் மருத்துவக்கல்லூரியில் உள்ள அனைத்து சிறப்பு மருத்துவர்கள் செவிலியர்கள், அரசு மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள், மருந்து ஆளுநர்கள், ஆய்வக நுட்புநர்கள் பல்வேறு இதர பணியாளர்கள், பொதுமக்களுக்கு சிறப்பு சிகிச்சை அளித்தனர். மேலும், அரசு மருத்துவக் கல்லூரி, அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள அனைத்து மருத்துவ உபகரணங்கள், கருவிகள் போன்றவற்றை எடுத்து வந்து இந்த முகாமில் சிகிச்சை அளித்தனர். தனியார் மருத்துவமனை மருத்துவர்கள் கருவிகள் உபகரணங்கள் போன்றவற்றுடன் வந்து முகாமில் இலவச சிகிச்சை அளித்தனர். இந்த பன்னோக்கு சிறப்பு, மருந்துவ முகாமில் காப்பீட்டு திட்ட அட்டைகளும் வழங்கப்பட்டன.

பொது மருத்துவம் இருதய நோய் சிகிச்சை. சர்க்கரை நோய் புற்றுநோய், பல் மருத்துவம். காது, மூக்கு, தொண்டை மருத்துவம்: குடும்ப நல சிகிச்சை . மகப்பேறு. மருத்துவம். குழந்தை மருத்துவம், எலும்புமற்றும் மூட்டு, தோல், மனநல மருத்துவம். இசிஜி, ஸ்கேன் பரிசோதனை. இரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனை சித்தா யோகா மருத்துவம் ஆகியவற்றுக்கு ஒரே இடத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

மேலும் கரூர் மாவட்டத்தில் உதிரம் உயர்த்துவோம். பொக்கிஷம் திட்டம், தோழி போன்ற திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நிறைவாக 45 கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்துப் பெட்டகங்களையும், 10 பயனாளிகளுக்கு கண் கண்ணாடிகளையும், 44 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்ட அட்டைகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கினார்.

முகாமில் கரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் டாக்டர் தாமோதரன், கரூர் மாநகராட்சி ஆணையர் ரவிசந்திரன், துணை மேயர் தாரணி சரவணன், மண்டல தலைவர் சக்திவேல், சுகாதாரத் துணை இயக்குனர் டாக்டர் சந்தோஷ் குமார், இணை இயக்குனர் டாக்டர் சுதர்சன ஏசுதாஸ், தனி துணை ஆட்சியர் சைபுதீன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கீதா, மருந்தாளிகள். செவிலியர்கள் பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### திருவாரூர் கலைஞர் கோட்டத்தை

# மயிலாடுதுறை மாவட்டத்தினர் அனைவரும் சென்று பார்த்திட ஏற்பாடு!

## மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

நாகை, ஜூன் 27 -

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்ப தாவது:-

ஒரு நூற்றாண்டுக்கு முன் உதித்த திராவிட சூரியன் முத்தமிழ் கலைஞர் அவர்கள் தனது 14 வயதில் தனது போராட்ட கதிர்களை வீசி தமிழ் மொழியையும், தமிழினத்தையும், தமிழ்நாட்டையும் கடைசி வரை ஒளி திகழச் செய்த சூரியன் தி.மு.க. தலைவர் 50 ஆண்டுகள், பொதுவாழ்க்கை 80 ஆண்டுகள், பத்திரிகை துறை, திரைப்பட துறை, நாடகத்துறைகளில் 65 ஆண்டுகளுக்கு மேல் என தான் காலடி எடுத்து வைக்கும் அனைத்து துறையிலும் சிகரம் தொட்ட கலைஞருக்கு நிகர் கலைஞர் தான் என்ற கலைஞர் அவர்கள் நின்ற சட்டமன்ற தேர்தலில் 13 முறையும் வெற்றி பெற்ற, 5 முறை தமிழ்நாடு முதல்வராக இருந்து தமிழ் மக்களுக்காக பல திட்டங்களை கொண்டு வந்து தமிழ் மக்களின் வாழ்க்கை தரத்தை உயரச் செய்த முத்தமிழ் கலைஞர் அவர்களுக்கு அவரது நூற்றாண்டில் திருவாரூர் காட்டூரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவை போற்றும் வகையில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கலைஞர் கோட்டம் அமைத்து அதில் கலைஞர் தந்தை முத்துவேலர் நூலகமும், கலைஞர் முதல்வராக இருந்தபோது அவர் கொண்டு வந்த திட்டங்கள், சாதனைகளையும், கலைஞர் பதவி ஏற்பு விழா, தேசிய தலைவர்கள் சந்திப்பு போன்ற பல்வேறு சிறப்புகளை கொண்ட புகைப்படக் கண்காட்சி உள்ளிட்டவைகள் கலைஞர் கோட்டத்தில் தத்ரூபமாக அமைக்கப்பட்டுள்ளது.

திருவாரூர் காட்டூரில் கோட்டத்தை உருவாக்கிய கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள். இந்த கலைஞர் கோட்டத்தை மயிலாடுதுறை மாவட்டத்தை சேர்ந்த ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் தங்கள் பகுதிகளை சேர்ந்த கழக நிர்வாகிகள், கழகத்தினர், கழக முன்னோடிகள் தன்னார்வலர்கள், தொண்டு நிறுவனங்களை சேர்ந்தவர்கள், பொது மக்கள் ஆகியோரை திருவாரூர் காட்டூர் கலைஞர் கோட்டத்திற்கு அழைத்து சென்று அவற்றை பார்வை யிட்டு முத்தமிழ் அறிஞர் கலைஞரின் சாதனைகளை அறிந்து கொள்ள செய்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், மேலும் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கீழே குறிப்பிட்ட தேதிகளில் திருவாரூர் காட்டூரில் உள்ள கலைஞர் கேட்டத்தை சென்று பார்வையிடும் தேதியினை கழகத்தின ருக்கு முன்கூட்டியே தெரிவித்திடுவதோடு உரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டும் என கேட்டு கொள் கிறேன்.

தேதி பார்வையிடும் ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள்

29.6.2023 மயிலாடுதுறை வடக்கு ஒன்றியம் மற்றும் மணல்மேடு பேரூர்

30.6.2023 செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியம் மற்றும் தரங்கம்பாடி பேரூர்.

1.7.2023 குத்தாலம் வடக்கு ஒன்றியம் மற்றும் குத்தாலம் பேரூர்

2.7.2023 செம்பனார்கோயில் மத்திய ஒன்றியம்

3.7.2023 குத்தாலம் மேற்கு ஒன்றியம்

4.7.2023 குத்தாலம் கிழக்கு ஒன்றியம்

5.7.2023 மயிலாடுதுறை நகரம்

6.7.2023 மயிலாடுதுறை மத்திய ஒன்றியம்

7.7.2023 மயிலாடுதுறை கிழக்கு மற்றும் மேற்கு ஒன்றியங்கள்.

8.7.2023 சீர்காழி மேற்கு ஒன்றியம் மற்றும் வைத்தீஸ்வரன்கோயில் பேரூர்.

9.7.2023 சீர்காழி கிழக்கு ஒன்றியம்,

10.7.2023 கொள்ளிடம் கிழக்கு ஒன்றியம்

11.7.2023 கொள்ளிடம் மேற்கு ஒன்றியம்

12.7.2023 செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியம்.

15.7.2023 சீர்காழி நகரம்

குறிப்பு. மயிலாடுதுறை மாவட்டத்தை சேர்ந்தவர்கள் கலைஞர் கோட்டத்தை பார்வையிடும் பணியில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளை வார்டு கழக செயலாளர்கள் சிறப்பான ஏற்பாடுகளை செய்திட வேண்டும்.

இவ்வாறு நிவேதா எம். முருகன் தெரிவித்துள்ளார்.



தமிழினத்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவையொட்டி திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி நகரத்தில் ம.பொ.சி. சாலையில் அமைந்துள்ள திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் பேரறிஞர் அண்ணா மற்றும் தலைவர் கலைஞரின் திருவுருவ சிலைகளை அமைத்திட திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீசை சந்தித்து அனுமதி வழங்கிட மனு வழங்கினார். உடன் நிர்வாகிகள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குமாரபாளையம் ஜெ.கே.கே.சுந்தரம்
### ஜூன் 27 (2005)



சிறு வயதிலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். இலங்கையில் வசித்தபோது கொழும்புவில் கிளைக் கழகச் செயலாளராகவும், தாயகம் திரும்பிய பின் 1970ஆம் ஆண்டில் ஒன்றுபட்ட சேலம் மாவட்டத்தின் செயற்குழு உறுப்பினராகவும், கழக சொத்துப் பாதுகாப்புக்குழு உறுப்பினராகவும் கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் 2004ல் கோவையில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் “அண்ணா விருது” பெற்றவர்.

“நான் பதவியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் தமிழகத்தின் எந்தப் பகுதிக்கு சுற்றுப்பயணம் செய்தாலும், தன் காரிலேதான் நான் பயணம் செய்யவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருப்பார்” என தலைவர் கலைஞர் தனது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ. மணிமேகலை
### ஜூன் 27 (2017)



தனது இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொணடு கழகப் பணியாற்றியவர்.

மெரட்டூர் கிளைச் செயலாளர், மீஞ்சூர் ஒன்றிய துணைச் செயலாளர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழுக்களை திருவள்ளூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் தொடங்கி மகளிரின் முன்னேற்றத்திற்கு பாடுபட்டவர்.

கழக அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**